விலை ரூபா 1–25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 29 சித்திரை 29 றம்ழான் 13 இதழ் 82

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 12-5-1987

யாழ்.ஆஸ்பத்திரி விவகாரம்:

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மத்தியஸ்தத்துடன் பேசத் தயார்! புலிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செவ்

யாழ். அரசினர் போதனு வைத்தியசாலைகுறித்த பேச்சுக்களை சர்வதேச செஞ்கிலுவைச் சங்கத்தின் மத்தியஸ்தத்துடன் மேற்கொள்ள தயாராக உள்ளதாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தெரிவித்துள்ளது.

நேற்று அரச தரப்பில் இராணுவ அதிகாரிகாப்டன் கொத்தலாவலவுடன் யாழ். ஆஸ்பத்திரிகுறித்து புலிகள்பேச்சுக்கள் நடத்த இருப்பதாகஅறிவிக்கப்பட்டது. ஆலை எல்.ரி ரி.ஈ. இயக்கத்தினர் இப்பேச்சுக்களுக்கு முன்வரவில்லை.

இதுகுறித்து அவர்கள்வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். போதனுவைத்தியசாலை மீது தொடர்ச்சியாக தாக்குதல்களை மேற்கொண்டு வந்த சிறிலங்கா அரசு அதனை மூடும் கொடூரசெயலைச் செய்ய முடிவுசெய்தது. யாழ். வைத்தியசாலை எல்லைகளை உள்ளடக்கிய பகுதிகளிலிருந்து நாம் ஒருபோதும் கோட்டை இராணுவமுகாம்மீது தாக்குதல்களை மேற்கொண்டது கிடையாது.

ஆஸ்பத்திரியை மூடுவது தொடர்பாக இடம் பெற்ற மக்கள் போராட்டங்களும், சர்வதேச நெருக்கடிகளும் அரசின் உத்தரவை மறுபரிசீலனை செய்ய வைத்துள்ளது டன் எம்முடன் பேசும் நிலைக்கும் தள்ளிவிட்டுள்ளது. இதை தொடர்ந்து நாம் இது தொடர்பாக ஆலோசனைகளை நடாத்திக்கொண்டிருந்த சமயம் யாழ் நகர்ப்புறத்தில் அப்

(3-ம் பக்கம் பார்க்க)

# வண்ணை சிவன்கோயில் மேற்கு வீதியில் 'பொம்மர்' குண்டுவீச்சு

## பெண்மணி உட்பட 4 பேர் பலி

## வீடுகள், கடைகள் சேதம்!

(நமது நிருபர் என் கே. துரைசிங்கம்)

**யாழ்.நகரில் நேற்றுமாலை சுமார் இருவாரகால இடைவெளியின் பின்னர் 'பொம்மர்' விமானக்குண்டுவீச்சு இடம்பெற்றது வண்ணார்பண்ணைச் சிவன் கோயில் மேற்குவீதியில் தாழ்வாகப்பறந்துவந்த பொம்மர் விமானமொன்று நடத்திய குண்டுவீச்சில் பெண்மணி ஒருவர், உட்பட நால்வர். உயிரிழந்தனர் பலர்காயமடைந்தனர், வீடுகள், கடைகள் சேதமடைந்தன.**

நேற்று மாலை 4-10 மணியளவில் தாழப்பறந்துவந்த பொம்மர் விமானமொன்று வண்ணை சிவன்கோவில் மேற்கு வீதியில் [மானிப்பாய் வீதி] திடீரெனக் குண்டு வீசியது. இதில் சுப்பிரமணியம் வள்ளியம்மை (41 வயது) என்ற பெண்மணி உட்பட நான்குபேர் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மாண்டனர்; பலர் காயமடைந்தனர். வீதியில் நின்ற லொறியொன்றின் மீது குண்டொன்று விழுந்து வெடித்ததில் அந்த லொறி சேதமடைந்தது.

குண்டுகள் விழுந்து வெடித்ததினுல் பத்திற்கும் அதிகமான வீடுகள் இப்பகுதியில் சேதமடைந்தன.

மானிப்பாய் வீதியிலுள்ள முருகவிலாஸ், ஆதித்தன் ஸ்ரோர்ஸ், டீன்சன்ஸ், அபிராமி ஆகிய வர்த்தக நிலையங்கள் சேதமடைந்துள்ளன.

நீராவியடியில் கடையிற்சாமி கோயிலடியிலும் பொம்மர் விமானக்குண்டு வீச்சு நேற்றுமாலை இடம் பெற்றது இதில் இருவீடுகள் சேதமடைந்துள்ளன.

நேற்றுமாலை முஸ்லீம் வட்டாரத்தில் ஹெலிகாப்டர் நடத்திய தாக்குதலில் காயமடைந்த மொகமட் சாகீப் ஹவ்வம்மா (65 வயது) ஸியானு (20 வயது) லொறிச் சாரதி மதிஜீவன் (22 வயது) மண்டைதீவு ஆகியோர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குண்டுவீச்சு இடம்பெற்ற பகுதிகளில் பொதுமக்கள் விமானங்களைக் கண்டதும் பதுங்கு குழிகளுக்குள் புகுந்தனர். இதனுல் பெருமளவில் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது இருஹெலிகாப்டர்களும் நேற்று வழமைபோல் இரு பொம்மர்களுடன் வந்திருந்தன. (ஒ)

## 'ஈழநாடு' சேதமில்லை!

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ். நகரில் நேற்றுமாலை விமானப்படையினர் மேற்கொண்ட குண்டுவீச்சுத் தாக்குதலில் 'ஈழநாடு' அலுவலகத்துக்கு சேதமேற்படவில்லை. 'ஈழநாடு' அலுவலகமும் சேதமாக்கப்பட்டுள்ளது என நகரில் பரவலாக இடம்பெற்ற வசந்திகளையடுத்து நேற்றுமாலை எமது அலுவலகத்துக்கு அபிமானிகள் படையெடுத்த வண்ணமிருந்தனர்.

தாக்குதலை மேற்கொண்ட இரு பொம்மர்களும் 'ஈழநாடு' அலுவலகத்தின்மீது மிகத் தாழ்வாகப் பறந்து சென்றன. அருகேயுள்ள பகுதிகளிலேயே அவை குண்டுவீச்சை நடத்தின.

## நீர்வையில் 10 வீடுகள் ஹெலி தாக்குதலில் சேதம்!

யாழ்ப்பாணம், செவ்.

நீர்வேலிப்பகுதியை வட்டமிட்ட இரு ஹெலிகாப்டர்கள் நேற்றுமாலை பலமணி நேரம் தொடர்ச்சியாக வேட்டுக்களைத்தீர்த்தன. இடையிடையே ஷல்தாக்குதலும் நடாத்தப்பட்டது சீபிளேன் ஒன்றும் வேவுநடவடிக்கையில் ஈடுபட்டதை காணமுடிந்தது.

இத்தாக்குதலினல் சுமார் 10 வீடுகள்வரை சேதமடைந்துள்ளன. நடராசா என்பவர் [வயது 60) கையில் காய

(3-ம் பக்கம் பார்க்க)

## இந்தியா புதிய யோசனைகள்

[புதுடில்லி]

இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வுகாணும்வகையில் தமிழ்த் தீவிரவாதிகளும் இலங்கை அரசும் மீண்டும்பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் பொருட்டு பல புதிய யோசனைகளை இந்தியா தயாரித்துள்ளதாக இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றக் கூட்டத் தொடரின் இறுதியிலேயே திரு. காந்தி மேற்கண்டவாறு தெரிவித்தார். [சி]

## சிமெந்துஆலை வெடிமருந்தை இராணுவம் பொறுப்பேற்றது!

பலாலி, திங்கள்

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை வெடி மருந்து அறையிலிருந்த சகல வெடி மருந்துகளையும் காங்கேசன் துறை இராணுவம் பொறுப்பேற்றுள்ளது.

இதுவரைகாலமும் வெடி மருந்து அறையில் இராணுவம் நிலைகொண்டிருந்த போதிலும் சிமெந்துக் கூட்டுத்தாபனப் பொறுப்பில்தான்வெடிமருந்துகள் இருந்தன. ஆனுல் அம் மருந்து வகைகளை இராணுவம் பொறுப்பேற்று முகாம் எடுத்து சென்றுள்ளதாக அறியப்படுகிறது இதேவேளை காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை எதிர் வரும் 15ம் திகதி மீண்டும் இயங்க ஆரம்பிக்குமெனவும் தெரியவந்துள்ளது.

## திவுலப்பிட்டி மக்கள் வங்கியில் ஆயுத நபர்கள் கைவரிசை ஒருவர் பலி, பணம் கொள்ளை

கொழும்பு, திங்

வடமேல் மாகாணத்திலுள்ள திவுலப்பிட்டிய மக்கள் வங்கிக் கிளையினுள் நேற்றுக் காலை பொலிஸ் சீருடையில் புகுந்த இனந்தெரியாத ஆயுத நபர்கள் வங்கியிலிருந்த ஒருவரைச் சுட்டுக்கொன்றதுடன் பெருந்தொகைப்பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹை-எஸ் வானென்றில் வந்த எட்டுநபர்கள் வங்கி முகாமையாளரையும் சுட்டுக் காயப்படுத்தியுள்ளனர். தாம் வந்தவானிலேயே தப்பியோடிய அவர்கள் பின்னர் வேறொருகாரில் ஏறிப்போன தாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கொள்ளையடிக்கப்பட்ட பணத்தின் தொகை பற்றித்தெரியவில்லை.

இச்சம்பவததையடுத்துதீவிர தேடுதல்வேட்டை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. (ஊ)

## தமிழக முதல்வர் குறித்த காமினியின் கருத்துக்கு இந்திய பாராளுமன்றில் கண்டனம்!

சென்னை, மே 11

இலங்கையில் பாதிக்கப்புட்ட தமிழர்களுக்கு உதவுவதற்காக 4 கோடி ரூபா நிதியுதவி செய்வது சம்பந்தமாகத் தமிழக முதல்வர் அறிவித்திருந்தமை குறித்து இலங்கை காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா நேற்றுச் சென்னையில் தெரிவித்த சொற்பிரயோகங்கள் தொடர்பாக இந்திய பாராளுமன்றின் இரு சபைகளிலும் பலத்த கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன.

நேற்று சபையில் அனைத்திந்திய அ. தி. மு க. உறுப்பினர்கள் திரு. குழந்தைவேலு இதுதொடர்பாக கேள்வி எழுப்பி ஆற்றிய தமது கண்டன உரையில்; "திரு. எம். ஜி

(3-ம் பக்கம் பார்க்க)

## கோட்டை அருகே இரு கல்லூரிகள் பாதுகாப்புக்கு உத்தரவாதமில்லை?

யாழ்ப்பாணம், செவ்

யாழ். கோட்டை இராணுவ முகாமிற்கு அருகிலுள்ள இரு கல்லூரிகளுக்கான பாதுகாப்பிற்கு உத்தரவாதமளிக்க முடியாதென உயர்மட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ள

(3-ம் பக்கம் பார்க்க

## இடமாற்றம்

### வைத்தியலிங்கம் மரக்காலை

இல. 241, மின்சாரநிலைய வீதி,

யாழ்ப்பாணம்.

பாதுகாப்பின் நிமிர்த்தம் எமது ஸ்தாபனம் தற்காலிகமாக இல 99/7, பிறவுண் வீதிக்கு [நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கும் அரசடிச் சந்திக்குமிடையில்] இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதென்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகிறோம்.

VAITHIALINGAM TIMBER DEPOT

No. 99/7, BROWN ROAD, JAFFNA

சி-9030

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

திருமண அழைப்பிதழ்களும் திருமண வாழ்த்துமடல்களும், திருமண ஆண்டு நிறைவு வாழ்த்து மடல்களும், பிறந்த நாள் வாழ்த்து மடல்களும், சகல விலைகளிலுமான முத்திரைவகைகளும், வான் கடித உறைகளும் மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்ள: அரஸ் ஜவுளியகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24001.
சி 8001

எங்களிடம் எந்நேரமும் சுப முகூர்த்தங்களுக்கு உரிய பட்டு புடவைகளும் மற்றும் சகல வைபவங்களுக்கேற்ற புடவை வகைகளும் பெற்றுக்கொள்ளலாம். கணேசன் ஸ்ரோர்ஸ், இல. 11, கஸ்தூரியார் ஒழுங்கை, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம். ஏ-3980

ஹலால் பைரஹா புறொயிலர் கோழிஇறைச்சி [Bairaha Broiler Chicken] பேரீச்சம் பழம், வளர்ப்பு மீன்உணவு முதலியன விற்பனைக்குண்டு. சற்குணராஜா பிறதர்ஸ், 660, கே;கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். சி-9009

யூலை மாதம் நடைபெறவிருக்கும் 6ம் ஆண்டிற்கான புலமைப்பரிசில் பரீட்சைகுரிய பயிற்சி நூல். கணிதம்- தமிழ் இரண்டையும் உள்ளடக்கிய 15 பயிற்சிகள். விலை ரூபா 16/90. பூபாலசிங்கம், சிறீலங்கா, ஸ்ரீ சுப்பிரமணியம் ஆகிய புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம். வெளியீடு அஸ்ரன் பதிப்பகம், 166/1 ஆஸ்பத்திரி வீதி- யாழ்ப்பாணம். (சி 8877)

பிறந்தநாள், திருமணநாள், திருமண ஆண்டு நிறைவு, மற்றும் சகலவிதமான வாழ்த்துக்கள் அனைத்தும் விற்பனையாகின்றன. விற்பனைக்கு மொத்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பூபாலசிங்கம் புத்தகசாலை. யாழ்ப்பாணம். எமது களஞ்சியம் 15/2, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.
சி-8812

உதவி ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்குரிய வழிகாட்டி, "பொது அறிவும் பொது உளச் சார்பும்" விலை ரூபா 49/50. 1984, 87ல் நடைபெற்ற பரீட்சை வினா - விடைப் பயிற்சிகளையும் உள்ளடக்கியது. பூபாலசிங்கம், சிறீலங்கா, ஸ்ரீ சுப்பிரமணியம் ஆகிய புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாகப்பெற அஸ்ரன் பதிப்பகம், 166/1 ஆஸ்பத்திரி வீதி, யாம்ப்பாணம்.
(சி 8878)

தரமான 1000W, 1500W ஒமேகா மேக் எவர்சில்வர் Hot Plateஐ வாங்கி உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவியுங்கள். உடையாத பிளச், தரமான வயர், பாத்திரங்கள் வைக்க, மேல் வளையம், பாதுகாப் புறுதி.யாரிடம் ஒமேகா மேக் கொற் பிளேட்டை வாங்கினுலும் One year free service ஐந்திற்கு மேல் வாங்குபவர்களுக்கு விசேட கழிவு உண்டு. Omega, Manipay Rood, Jaffna. (சி-9034)

பிரம்பு ஹோல் செட் Sony 2092 ME, Fan, கட்டில், கதிரை, தேக்கு அலுமாரிகள், தொட்டில், Amplifier Camera 120, புதிய குளிர் சாதனப் பெட்டிகள், Towel Rack, Floor Polisher மற்றும் பல பொருட்கள் விற்பனைக்குண்டு. பத்மநாதன், பிறி மற்றி சேவிஸ், திருநெல்வேலி வடக்கு. சி-9035

## தேவை

பயிற்றப்பட்ட தாதிகள் தேவை. நேரில் வரவும்: சென்றல் நேசிங் ஹோம், 350, பலாலி வீதி, திருநெல்வேலி.
[சி-8977]

## வகுப்புக்கள்

வெளிநாடு உள்நாடு வேலை தேடிச் செல்பவர்கட்கு ஓர் அரிய சந்தர்ப்பம். தொழில் நுட்பக் கல்வி பயிற்சியுடன் ஆரம்பமாகின்றது. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும் தொடர்பு; Vispa Engineering aid Hall, (ஆனைப்பந்திச் சந்திக்கு அருகாமையில்), 328, நாவலர் றேட், யாழ்ம்பாணம்.
(சி 9023)

Spoken English சனி,ஞாயிறு வகுப்புக்கள் ஆரம்பம் 16-5-87 மாலை 4 மணி—6 மணி வரை. S.P.Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (சி 9029)

## பயிற்சி

Computer Programming ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியறிங், எலக்றிக்கல் வைன்டிங், வயறிங் பயிற்சிகள் கூடிய நேர செய்முறைப் பயிற்சியுடன் குறைந்த கட்டணத்தில் பயிற்சியளிக்கப்படும். ஆரம்பம் 15-05-87. விபரங்களிற்கு: Jaffna Technical Institute, யாழ் வீதி [பாமஸி அருகாமை], மானிப்பாய்.
[சி 9007]

## மணப்பந்தல்

சிங்க லக்கினத்தில் பிறந்தவரும். லக்கினத்தில் செவ்வாயுடன் சூரியனும் சேரப்பெற்றவரும், சைவ போஷனம் புசிப்பவருமான, 30 வயதுள்ள வேளாளகுலப் பெண்ணுக்கு நிரந்தர தொழில் புரியும் அதேகுல மணமகன் தேவை. பெண்ணின் ஜனன நட்சத்திரம் பூரம் 1 ம் பாதம் மொத்தக் கிரகபாவம் 48 குறிப்புடனும், குடும்ப விபரத்துடனும் விண்ணப்பிக்கவும். சீதனம் தகுதிக்கேற்ப வழங்கப்படும். விண்ணப்பிக்கவும். விளம்பர இல மே/பா 9031 ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-9031)

யாழ். விஸ்வகுல குடும்பத்தைச் சேர்ந்த 7-ல் செவ்வாயுள்ள தம் மகளுக்கு 33-40 வயதிற்குட்பட்ட மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கிறார்கள். சொந்தத் தொழில் செய்பவர்கள் அல்லது உத்தியோகம் விரும்பத்தக்கது. சாதகக் குறிப்பு மற்றும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். நியாயமான சீதனம் கொடுக்கப்படும். விண்ணப்பிக்கவும் விளம்பர இல. சி-9028 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம்.
(சி-9028)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## மருத்துவபீட இறுதி ஆண்டுப் பரீட்சை 1987

மருத்துவபீட இறுதி ஆண்டுப் பரீட்சை மே மாதம் 25ம் திகதி ஆரம்பமாகும். பரீட்சை முன் அறிவித்த ஒழுங்கு வரிசைப்படியே நடைபெறும்.
பதிவாளர்.
[ஏ3987]

## பிஸ்கால் ஏல விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழ. இல. பிரிவிடுதல் 2561

1. நமசிவாயம் மகாலிங்கம்
2. நமசிவாயம் வேலாயுதபிள்ளை
3. நமசிவாயம் தருமலிங்கம் (இறந்து விட்டார்)
3 அ. தருமலிங்கம் இராஜேஸ்வரன் (பராயமற்றவர்)
3 ஆ. தருமலிங்கம் மகள் நிரஞ்சனு (பராயமற்றவர்)
3 இ. தருமலிங்கம் மகள் நிர்மலா (பராயமற்றவர்)
3 ஈ தருமலிங்கம் மகள் மஞ்சுளா ,, (பராயமற்றவர்)
3 உ. தருமலிங்கம் யோகேஸ்வரன், (பராயமற்றவர்)

3அ. 3உ வரையுமானோர் பராயமடையாதவர்களாக இருப்பதால் அவர்களின் வழக்கு நண்பர் 3ஊமூலம் 3ஊ. தருமலிங்கம் கைம்பெண் இரத்தினம்
4. நமசிவாயம் சிவலிங்கம்
5. நமசிவாயம் வடிவேலு
6. நமசிவாயம்

இளையதம்பி இவர்கள் எல்லோரும் மயிலிட்டி வடக்கு.
வழக்காளிகள்,

எதிராக

1. தம்பிப்பிள்ளை பொன்னுத்துரையும் பெண்
2. ஈஸ்வரியும் இவர்கள் இருவரும் தையிட்டி காங்கேசன்துறை.
எதிராளிகள்,

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் பிரிவிடுதல் 2561ம் இலக்க வழக்கிலே எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் காணியை 1987ம் ஆண்டு ஆனி மாதம் 4ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

2ம் எதிராளி கொடுக்க வேண்டிய தொகை ரூபா 3100/-ம் இவ்வழக்குச் செலவு தொகையாக கொடுக்க வேண்டிய மொத்தத்தொகை ரூபா 3029/37யும் அறவிட வேண்டும்.

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி மயிலிட்டி கோவிற்பற்று மயிலிட்டி இறை "வப்பத்தை" நிலப் பரப்பு 3 குழி 17½ பயிர் வகைகளும் இது 20 - 8 - 1985ம் ஆண்டு உத்தரவுபெற்ற நில அளவையாளர் சி. அழகையா அவர்களால் 1353ம் இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தில் துண்டு 1 எனக்காட்டப்பட்டுள்ள இதற்கு எல்லை கிழக்கு குறித்த படத்தில் துண்டு 2 எனச்சுட்டப்பட்டிருக்கும் பாகம் வடக்கு கார்த்திகேசு கணபதிப்பிள்ளைக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம் மேற்கு ஒழுங்கை தெற்கு குறித்த படத்தில் துண்டு 3 எனச்சுட்டப்பட்டிருக்கும் பாகம் இல்வெல்லைப் படி இதடங்கலும்.

நடராசா ஜெகநாதன்
பிஸ்கால் / பதிவாளர்.
மாவட்ட நீதிமன்றம்,
மல்லாம்.
29 - 4 - 87.
(சி 8999)

## இன்றைய பலன்

மாதம்: சித்திரை
கிழமை: செவ்வாய்
திகதி: 29 (1987-05-12)
திதி: சதுர்த்தசி மு இவரை
நக்ஷத்திரம்: சுவாதி பி. இ. வரை.
மேடம்: குடும்ப நலனில் புதிய உற்சாகம் பிறக்கும், உறவு முறைகளில் அபிவிருத்தி காணப்படும், அமைதியுடன் காரியங்களைச் சாதிப்பீர்கள்.
இடபம்: பேராசையின் மூலம் குறுக்குவழியை நாடுவீர்கள், இதனுல் விபரீதங்கள் தோன்றக்கூடும், மறைமுக எதிர்ப்புக்களைச் சமாளிக்க நேரிடும்.
(5-ம் பக்கம் பார்க்க)

## விற்பனைக்கு

29 SRI 7404 இலக்க

**26 ஆசனங்கள் கொண்ட மினி பஸ்**

இவ்வாகனத்தை இல. 555, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் கிழமைநாட்களில் பார்வையிடலாம்.

இதனை வாங்குவதற்குரிய கேள்விப் பத்திரங்கள் தபாலுறையின் இடதுமேற்பக்கத்தில் "விற்பனை" என்று எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரிலோ 26-05-87 செவ்வாய்க்கிழமைவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

**மேர்ச்சன்ட் பினுன்ஸ் லிமிட்டெட்,**

555, நாவலர் வீதி.
(கைலாசபிள்ளையார் கோவில் மேற்கு வீதியடி)
யாழ்ப்பாணம்.
[எ-3863]

## முக்கிய அறிவித்தல்

யாழ். நகரில் தற்போது நிலவிவரும் சூழ்நிலை காரணமாக, பொதுமக்களின் நன்மை கருதி எமது ஸ்தாபனம் கீழ்க்காணும் இடத்திலும் இயங்கிவருகிறது. சகல பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் இந்த விலாசத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**எஸ். சுப்பிரமணியம் & கொம்பனி**
34, ஆடியபாதம் வீதி
(நல்லூர் சந்தையிலிருந்து 100 யார் தூரத்தில்)
கல்வியங்காடு.

**எஸ். சுப்பிரமணியம் & கொம்பனி**
53, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(ஏ 3991)

## சேவ்ரி போக்குவரத்து ஸ்தாபனத்தாரின் முக்கிய அறிவித்தல்

பிரயாணிகளின் வசதியைக் குறிக்கோளாகக் கொண்டு யாழ்ப்பாணம் / கொழும்பு பஸ்சேவையை எதிர்வரும் புதன்கிழமை தொடக்கம் (13-5-87) அராலித்துறையில் இருந்து காலை 6-00மணிக்கு ஆரம்பமாகி வட்டுக்கோட்டை, சித்தங்கேணி, சங்கானை, மானிப்பாய் ஊடாக யாழ்ப்பாணம் வந்து கொழும்புக்கு வழமைபோல் காலை 7 00 மணிக்கு புறப்படும்.

தங்கள் ஆசனங்களை பின்வரும் இடங்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.

1. சேவ்ரி கிளைக்காரியாலயம்,
சங்கானை.
(சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அருகாமையில்)
2. மல்லிகா ஹோட்டல்
சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.

கொழும்பில் இருந்துவரும் பிரயாணிகளுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து மானிப்பாய், சங்கானை, சித்தங்கேணி வட்டுக்கோட்டை, அராலித்துறை வரை பிரயாண ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும்.

குறிப்பு: ரிக்கற்பெறும் பொழுது நீங்கள் ஏறவேண்டிய இடத்தை கூறி குறித்துக்கொள்ளவும்.

எமது தலைமைக் காரியாலயம் தற்காலிகமாக
**சேகர் மோட்டோர்ஸ்,**
**118, ஸ்ரான்லி வீதிக்கு**
மாற்றஞ் செய்யப்பட்டுள்ளது.
**சேவ்ரி போக்குவரத்து ஸ்தாபனத்தார்**
[எ-3992]

## அராலியில்

[3ம் பக்கத் தொடர்ச்சி]

புலிகள் எதிர்த் தாக்குதலை மேற்கொண்டனர்.

இருபகுதியாரின தாக்குதல் களால் சிலமணி நேரம் பெரும் பதற்றம் நிலவியதுடன் போக்குவரத்துக்களும் ஸ்தம்பித்தன. (எ)


## 31-ம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்

### செல்வி பவானி அருணாசலம்

(உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மாணவி)

தோற்றம்: 10-01-1969

மறைவு: 12-04-1987

காலமெல்லாம் கண்ணீரில் எங்களை ஆழ்த்தி விட்டுஅகால மரணமடைந்த அன்புச் செல்வமே! உம் கல்விக்காக அயராது பாடுபட்டீர், நீர் கல்வி கற்கச் சென்ற வழியில் காலன் உம்மை கவர்ந்து விட்டான். உம்ஆசை மொழிகேட்டு 31 நாட்கள் மறைந்தாலும் நாம் மண்ணில் உள்ளவரை உம அன்புமுகம் எங்களை விட்டகலாது. உம் நல்லாத்ம சாந்திக்காக நாம் இறைவனை இறைஞ்சுகின்றோம்

13-4-87 திங்கட்கிழமை நடைபெற்ற இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், மற்றும் பல வகைகளில் உதவிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எங்கள் அன்பான நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறோம். உம் பிரிவால் துயருறும்:

நா. அருணாசலம் குடும்பத்தினர்.
(ரெசர் உரிமையாளர்)

வல்வெட்டி. (சி 9033)



## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் செல்லப்பா வேலுப்பிள்ளை

மலர்வு: 11-10-1917

உதிர்வு: 12-05-1983

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய், பாசத்தின் உறைவிடமாய் இருந்து எம்மையெல்லாம் வழி நடத்திய அன்புத் தெய்வமே, நீங்கள்இறைவனடி சேர்ந்து ஆண்டு நான்கு ஆகியும் எங்கள் உள்ளத்தில் நிலையாய் நிற்கும் உங்கள் அன்பு என்றும் நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் அன்பு நீங்காத மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

தங்கோடை, காரைநகர். (சி 9040)


# "எம். ஜி. ஆரின் உற்சாகமே தமிழ்ப் போராளிகளின் போருக்குகாரணம்"

## தமிழக முதல்வரை சாடுகிறார் இலங்கை அமைச்சர் காமினி

சென்னை, மே 11

தமிழகமுதல்வாதிரு. எம். ஜி. இராமச்சந்திரனும் மற்றும் தமிழக கட்சிகளும் கொடுத்து வரும் உற்சாகம்தான் தமிழ் தீவிரவாதிகளின் போருக்குக் காரணம் என்று இலங்கையின் காணி அபிவிருத்தி மகாவலி அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா சென்னையில் தெரிவித்தார்.

ஆசிய கிரிக்கட் மகாநாட்டின் பிராந்திய தலைவர் என்ற ரீதியில் தமிழகம் சென்றிருந்த திரு. திசநாயக்கா ஈழத்தில் இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு தமிழக முதல்வர் 4 கோடி ரூபா நிவாரண உதவி வழங்க முன்வந்திருப்பதை பலமாகக் கண்டித்தார்.

தமிழக முதல்வரின் 4 கோடி ரூபா உதவியை இலங்கைக்கு அனுப்பினால் இலங்கையில் அது கள்ளக்கடத்தல் பொருட்களாகக் கணிக்கப்பட்டு அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறிய அமைச்சர்-

எம், ஜி. ஆர். இந்த உதவியின் மூலம் இலங்கையின் உள் விவகாரத்தில் தலையிடுகிறார் என்றும் குற்றம் சாட்டினார்.

## எம்.ஜி. ஆரைசந்திக்கும் நோக்கமில்லை

சென்னை, மே 11

கிரிக்கட் பயணத்தைமேற்கொண்டு தமிழகம் வந்துள்ள எனக்கு இந்திய மத்திய அமைச்சர்களையோ, தமிழக முதல்வர் திரு. எம். ஜி இராமச்சந்திரனையோ சந்திக்கும் நோக்கம் கிடையாது என்று திரு. காமினி திசநாயக்கா தெரிவித்தார்.

நிருபர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கு திரு. திசநாயக்கா, கிரிக்கட் வளர்ச்சி பற்றியே நான் இந்திய கிரிக்கட் அதிகாரிகளுடன் பேசப் போகின்றேன் என்றும் கூறினார்.

# "கூட்டணியுடன் கடைசியாகப் பேசியபின் மாகாணசபைத்திட்ட நகல்மசோதா தயார்"

சென்னை, மே 11

இலங்கையின் இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு வகை செய்யும் விதத்தில் மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கக்கூடிய மாகாண சபைத் திட்ட நகல் மசோதாவை இலங்கை அரசாங்கம் தயாரித்து விட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் அரசாங்கம் கடைசியாக நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னரே இந்த நகல் மசோதா தயாரிக்கப்பட்டது.

இவ்வாறு காமினி திசநாயக்கா சென்னையில் மற்றொரு நிருபரின் கேள்விக்குப் பதில் அளிக்கையில் கூறினார்

அவர் மேலும் கூறியதாவது இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு வசதியாக அரசுடன் பேச்சு நடத்த தமிழ்குழுக்கள் தயாராக இல்லாவிட்டாலும் மாகாணங்களுக்கு மேலும் அதிக அதிகாரங்களை வழங்க வழிசெய்யும்விஷயத்தில் அரசுசுயேச்சையான உடன்பாடு ஒன்றை கொள்ளக்கூடும்.

### டிசம்பர் 19 யோசனை நிலையில் மாற்றம் இல்லை

இலங்கை அரசு இன்னமும் டிசம்பர் 19 யோசனைகளையே பற்றி நிற்கிறது. இதில் எவ்வித மாற்றமும் இல்லை.

தமிழ் மக்களில் பெரும்பாலோர் தற்போதைய வன்முறைச் சம்பவங்கள் முடிவுக்கு வரவேண்டும் என்றே விரும்புகின்றனர்.

## நீர்வேலி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்தார்.

நேற்று நண்பகலிலும் இப்பகுதியில் ஹெலியிலிருந்து நடத்தப்பட்ட தாக்குதலில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி கூரைப்பகுதி சேதமடைந்தது.

அச்சமயம் பாடசாலையிலிருந்த மாணவர்கள் தெய்வாதீனமாக எவ்வித சேதமும் இன்றித்தப்பினர். (ஒ)

## காமினியின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ராமச்சந்திரனை அவமதித்ததன் மூலம் இந்தியாமுழுவதையுமே திரு திசநாயக்க அவமதித்து விட்டார்'' என்றார்.

மாநிலங்கள் சபையில் இது தொடர்பாக திரு. வலம்புரி ஜான்ஆற்றிய கண்டன உரையில் திரு. திஸநாயக்காராஜதந்திர சலுகைகளை தவறாக பயன்படுத்தி விட்டதாகவும் தமிழக மக்களை பெரும் அவமானப்படுத்தியுள்ளதாகவும் கூறினார்.

இதுதொடர்பாக இந்தியா தனது கடும் ஆட்சேபனையை இலங்கையிடம் தெரிவிக்க வேண்டுமென்றும் திரு. வலம்புரிஜான் உட்பட பல உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டனர். (சி)


## 31-ம் நாள் நினைவஞ்சலி



பொன்னுச்சாமி ராஜ நாதன்

(மின்பொறியியலாளர் லண்டன்)

தோற்றம்: 24-08-1941

மறைவு: 12-04-1987

கடல் படகினில், திசை காட்டி போகும் பயணத்தில் கைகாட்டி பாதையைத் தெரிவிக்கும் வழிகாட்டி நீயே எங்கள் உயிர்நாடி.

குடும்பத்தினர்.

கே. கே. எஸ். வீதி, கோண்டாவில்.

(சி 9038)



லிடோ யாழ். நகர்

10-30, 2-30, 6-30

சிவகுமார் -சுஹாஷினி நடித்த

சிந்து பைரவி

1986ம் ஆண்டு இந்திய ஜனாதிபதியின் சிறந்தவிருதைப்பெற்ற படம் சங்கீத இசைப்பிரியர்களுக்கோர் சிறந்த வரப்பிரசாதம்.

[புதிய வெளியீடு கலர்]

புதிய வெளியீடு

வெலிங்டன் திரையில்

10-30, 2-30, 4-30, 6-30

நவீனரக ஆயுதங்களுடன் பயங்கர சண்டைகள் நிறைந்தது.

Anthony Quinn - James Corburn
Lindsay Wagner in
HIGH RISK
(Colour)


## இன்றைய பலன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மிதுனம்: புண்ணிய விடயங்களில் ஆர்வம் பிறக்கும், பொதுத்துறையில் புகழ் பரவும், பெரியோர்களுடைய உதவிக்கும் இடமுண்டு, கொண்ட கொள்கையில் உறுதிப்பாடு தென்படும்.

கடகம்: புதிய முயற்சிகளில் ஆர்வம் தோன்றக்கூடும், வியாபாரிகளுக்கும் இலாபகரமான தினம், புதிய தொடர்புகள் மூலம் முன்னேற்றம் காணப்படும்.

சங்கம்: பொருளீட்டுவதில் புதிய வழிகளைக்கையாளுவீர், எதையும் சிறப்பாகச்சாதிப்பதில் முதலிடத்தைப் பெறுவீர், மக்களாலும் மகிழ்ச்சியுண்டு.

கன்னி: சிந்தனை புதிரோடும், சீறிவருங் கோபப் பெரியவர்களைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம்,தொழில் துறையில் புதிய கவலைகள் தோன்றக்கூடும்.

துலாம்: ஆசை அலைகளினால் அவதிப்படுவீர்கள், வாழ்க்கையில் நிம்மதியற்றநிலை தென்படும், ஆணவப்போக்கைத் தவிர்த்துக்கொள்ளவும்.

விருச்சிகம்: குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும், நீண்டநாள் பகை நிவர்த்தியாகும், நண்பராலும் நன்மையுண்டு. காதலர்கள் வாழ்க்கையில் பிணைப்புக்கள் இறுகும்.

தனுசு: ஆராய்ச்சிகளில் ஆர்வம் பிறக்கும், விலைபொருள் விருத்திக்கும் இடமுண்டு, சுகாதரவழி சுகக்குறைவுமுண்டு.

மகரம்: அன்னைவழி ஆதரவுமுண்டு, சாரதிகள் கவனம் வேண்டும், பொருள்வரவுமுண்டு

கும்பம்: அறவழிகளில் நாட்டம் செல்லும், புத்திரவழியால் மகிழ்ச்சிக்கும் இடமுண்டு, பணச்செலவுமுண்டு

மீனம்: ஏமாற்றம் தாக்கும், எதிலும் தயக்கநிலை தென்படும், செய்தொழில் மூலம் சிரமம் ஏற்படும், பொறுமை நன்று.

**திருமலை ரவீந்திரன்**

## படகுவிபத்தில் 100 பேர் பலி

பீககிங், மே-11

சீனாவில் இரு பிரயாணிகள் படகு மோதிக்கொண்டதில் நூற்றுக்கு மேற்பட்டோர் பலியாகியிருக்கலாமென அஞ்சப்படுகிறது

சீனாவின் யுவாங்-ஷி நதியிலேயே இவ்விபத்து இடம் பெற்றுள்ளது. இதுவரையில் இறந்த 6 பிரயாணிகளின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

## பஸ்சேவை இடமாற்றம்

யாழ்ப்பாணம், செவ்.

வடபிராந்திய போக்குவரத்துச்சபை தூரசேவை. உள்ளூர் சேவை பேரூந்து நிலையம் நாளை புதன்கிழமை முதல் யாழ்ப்பாணம் குருநாதசுவாமி கோவிலடியில் (பருத்தித்துறைவீதி, பலாலி வீதி சந்திக்குமிடம்) இருந்து செயற்படும்.

இதனையடுத்து தூரசேவைகள் எதுவும் நாளை முதல் நல்லூர் இந்து விடுதிக்கு அருகாமையிலிருந்து செயற்படமாட்டாது.

மேலும் தூரசேவையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வரும் சகல பேரூந்துக்களும் குருநாதசுவாமி கோவிலடி. ஆரியகுளம் ஊடாக வே யாழ் பஸ்நிலையம் சென்று வரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது (சி)

## சர்வதேச

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாவி மக்களின் குடியிருப்புகளின்மீதும், யாழ் ஆஸ்பத்திரியை சுற்றியும் பொம்மர் தாக்குதல்கள் இடம் பெற்ற வண்ணமிருந்தன.

இந்நிலையில் யாழ். ஆஸ்பத்திரி குறித்த பேச்சுவார்த்தையைச் சர்வதேசச் செஞ்சுலுவைச் சங்கப் பிரதிநிதிகளின் மத்தியஸ்தத்துடன் செயற்படுத்துவதையே நாம் விருப்புகிறோம்.

இத்துடன் வவனியா பௌத்த பீடாதிபதியும்,வண. பிதா யொகான் தேவானந்த போன்ற மதப் பிரதிநிதிகளும் அரசவைத்திய அதிகாரிகள் சங்கத் தலைவரும், செயலாளரும் இம்மஸ்தியஸ்தத்தில் இடம் பெற்று, பேச்சுவார்த்தைத் தீர்வுகள் ஒழுங்காகவும் நேர்மையானதாகவும் நடைமுறைப்படுத்த முன்வரும்பட்சத்தில் நாம் பேச்சுவார்த்தைக்குத் தயாராகவுள்ளோம்.

## கல்லூரிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக தெரியவருகிறது

இந்த இரு கல்லூரி மாணவர்களும் வேறுபாடசாலைகளுக்கு சென்று கல்வி கற்பதற்கான ஏற்பாடுகள் விரைவில் செய்யப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. [ஒ]

## கூட்டம்

யாழ் மத்தியகல்லூரி, வேம்படி மகளிர்கல்லூரிகளின்பெற்றோர் ஆசிரியர் சங்க பழைய மாணவர்சங்க கூட்டம் வெள்ளிக்கிழமை 15ம் திகதி நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தின் பின்னரே இப்பாடசாலைகள் இயங்குவது தொடர்பான முடிவெடுக்கப்படும். (ஒ)

## இந்தியா இனியும் பார்த்திருக்க முடியாது

புதுடில்லி, மே 21.

''இலங்கைத்தமிழருக்கு எதிராக இலங்கையில் செயற்பட்டுவரும் வெளிநாட்டுச் சக்திகளை இந்தியா இனியும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது'' என்று ஜனதா கட்சி தலைவர் திரு. சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

பெங்களூரில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

### மணிவாக்கு

ஒரு மனிதன் கூறுவதை வைத்துக்கொண்டு அவனை நம்பாதீர்கள்; அதை அவன் ஏன் கூறினன் என்பதைக் கண்டறியுங்கள்.

— மிக்குவல் டி செர்வான்டஸ்.

## நமது நோக்கு

# இந்துசமுத்திர வேட்டைக்கு இலங்கை வேண்டும்?

இலங்கை முழுமையாகவிருப்பதையே அதன் போருக்குமுடிவுகாணவிழையும் பெரு நாடுகள் விரும்புகின்றன.

குறிப்பாக அண்டை நாடாகிய இந்தியா, நாட்டின் ஒற்றை ஆட்சிக்கு பங்கமில்லாத வகையில் தமிழர் சுயாட்சியை ஆதரித்து வருகிறது. இந்தியாவின் மாநில ஆட்சிக்கு மேல் எதனையும் வற்புறுத்துவது நியாயமில்லையென நினைக்கிறது.

நீண்டகாலமாக அங்கும் இங்கும் வேறுநாட்டிலும் நடத்திய பேச்சுக்கள் உருப்படியான தீர்வைக்காண முடியவில்லை.

அடிக்கடி இலங்கை அரசு தனது நிலைப்பாட்டில் மாற்றம்கொண்டது இத் தோல்விக்கு முக்கிய காரணமெனலாம். தாங்கள் எடுக்க வல்ல முடிவை நாட்டுமக்கள் முன் நிறைவேற்றமுடியுமாஎன்ற சந்தேகம் பேச்சு வார்த்தைகளை இடைவிடாது அரித்துக்கொண்டிருந்தது. போராளிகளுக்கும் இதுவே சங்கடமாயிருந்தது

மத்தியஸ்தம்என்ற அடிப்படையில் பங்குகொண்ட இந்தியா, அத்தோரணையை அநாவசியமாக பலவீனப் படுத்தியது இன்று வெளிப்படுகிறது.

"இந்தியா ராணுவ நடவடிக்கை எதிலும் ஒரு போதும் தலையிடமாட்டாது; இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கும் ஒற்றையாட்சிக்கும் முரணான தீர்வு எதனையும் ஆதரிக்காது" என்று பாட்டின் பல்லவிபோல் திரும்பத் திரும்ப பாடிக்கொண்டிருந்தது.

இச் சிறு நாட்டின் அயலவர் ஒரு "இராட்சதன் போல்பருத்துக்கொழுத்த" நாடு; அதிலும் யாழ்ப்பாணத்திற்கு சுமார் 20 மைல் கடலுக்கப்பால் ஐந்து கோடி தமிழ் மக்கள் அதன் தமிழ் மாநிலத்தில் வாழ்கின்றனர். எனவே இந்தியா தென்இலங்கை மக்களுக்கு-வேறெந்த நாட்டிலும் காணமுடியாத சிங்களமக்களுக்கு நட்புநாடாகவிருக்கமுடியாது. இவ்வாறு பாமர சிங்கள மக்களை நம்ப வைத்திருக்கின்றனர் இந்த நாட்டில் தமிழ் மக்களுக்குரிய இடத்தை கோடுகீறிக் காட்டும் பண்புடைய சிங்களத் தலைவர்கள்.

இலங்கையில் பெரும்பான்மையராகவிருந்தும் தெற்கில் – ஏன் அனுராதபுரம் தொடக்கம் மாத்தறை வரைக்கும்— பார்க்குமிடமெங்கும் நீக்கமற நின்றும், இருந்தும், கிடந்தும் காணப்படும் புத்தபெருமானின் சிலைகளால் என்னபயன்? இவ்விதவிரக்தி தென்னிலங்கையில் உருவாக்கப்படுகிறது.

பெரும்பான்மை ஆட்சி நெருப்புப்பறக்கும் வகையில் நடைபெறும் இலங்கையில், சிங்கள ஆட்சியின் கொடுமை இதுவென்று தமிழ் மக்கள் போரால் உண்டான இயமவேதனையில், சிங்கள மக்கள் தாம் ஒரு "சிறுபான்மை இனம்' என்ற அச்சம் தொற்று நோய்போல் பரவுகிறது.

எனவே தெற்கில் தீவிர இனவாதமும் அது தூண்டிவிடும் இந்தியப் பகைமையும்; வடக்கில் தினசரி அழியும் தமிழ் மக்களுக்கு உதவ உறுதி கொண்ட இந்தியா நாள் நட்சத்திரம் பார்க்கும் தாமதமும் ஒரு உள்நாட்டுப் பிணக்கு இன்று உலகப் பிரச்னைகளில் ஒன்றாகத் தலையெடுத்திருக்கிறது.

அமெரிக்கா என்ற பெரிய நாடு நிக்குரகுவாவை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க றீகன் நடத்திவரும் நாடகம் எவருக்கும் தெரியும். அதேபோல் சீன வியட்நாமையும், சோவியத் ரஷ்யா அப்கானிஸ்தானையும் தத்தம் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முயல்கின்றன. எனவே இந்தியா தனது அயல்நாட்டை மிகச்சிறிய இலங்கையைத் தன் பக்கமே வைத்திருக்கத் தயங்குமா? இவ்வாறு கூறியவர் இந்தியத் தூதர் டிக்ஸிற். இதனைக் கருத்தில் கொண்ட பத்திரிகை 'நியுயோர்க் டைம்ஸ்'; தூதரின் கணிப்பு, உலக அரசியலில் சீர்தூக்கிப் பார்க்கப்பட்ட கருத்து. உலகப்பிரசித்திபெற்ற இப் பத்திரிகை ஆழமாக இப்பரசனையை ஆராய்கிறது.

இந்தியா ராணுவ நடவடிக்கை எடுக்குமென்ற கருத்து இக்கூற்றில் இருக்கவில்லையென்று தூதர் மறுத்திருப்பதும் நியாயமாகும். வேறுவழிகளில் இலங்கையின் இறுமாப்பை அடக்க முடியாது?

தமிழ்ப்போராளிகளின் வஞ்சனையற்ற தமிழ் உரிமைப் போராட்டம் இன்றைய இலங்கை அரசுக்கு நீண்ட வாழ்வை அளித்திருக்கிறது. ஆனால் அதன் அரசியல் குறுநோக்கு இந்தியாவின் பகைமையை வளர்த்திருக்கிறது.

இந்து சமுத்திரத்தில் அமெரிக்கா காட்டிவரும் 'நாட்டாண்மை' இப்பிராந்தியம் என்றுவது அமைதியாகுமாவென்ற சந்தேகத்தை எழுப்புகிறது.

இதற்கு தூபமிடும் எந்த அரசும் இந்தியாவின் சத்துராதி, இலங்கை அரசு அந்தத்துரோகத்தில் ஈடுபடுமாயின் தமிழர் பிரச்னை தானகத் தீர்வடையும்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு மே மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/ :/81 Eelanadu. P. O. Box Telegram, Eelanadu. Telephone: — 22389 24126.

உலக அரசியல்

அவதானி

# அமெரிக்க-சோவியத் ஆயுத உடன்பாடு நிறைவேறும் நிலை!

### நேற்றோ தளபதியின் கவலை

இராணுவத் தளபதிகளுக்கு போரோ போரின் அச்சமோ உலகை விட்டு நீங்குவது பிடிக்காது தனது தொழிலுக்கு அபாயமென்பதை எவர் விரும்புவார். நேற்றோ தளபதியாகவிருந்து ஆறு வருடத்துக்குப்பின் இளைப்பாறும் ஜெனரல் றொஜர்ஸ் (Rogers) சோவியத் வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றமில்லை என்கிறார். உலக ஆதிக்கமே அவர்களின் இலட்சியமென்றும் மேற்கு ஐரோப்பிய விவகாரங்களில் அவர்கள் கொண்ட நோக்கத்தில் மாற்றமில்லை என்றும் கூறுகிறார்.

நேற்றோ (NATO) பல வெற்றிகளைக் கண்டதால் மக்கள் வருங்காலத்தில் உண்டான அச்சத்தை உணர்வதில்லை. சோவியத் தலைமையில் நல்ல மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. கொர்பச்சேவ் உண்மையில் சமாதானத்தை நாடுகிறாரென்று நம்புவதால் அவர்களுக்கேற்படக்கூடியஆபத்தை விளக்க முடியாதிருக்கிறது. இது ஏமாற்றத்துக்குரிய விடயம் என்பது நேற்றோ தளபதியின் தெளிவான கருத்து. நிறுவனத்தின் ஒவ்வொருநாட்டையும் இராணுவத் துறையில் அதிகம் செலவழிக்கத் தூண்டியவர் இன்று 'நேற்றோ'வருடா வருடம் 350பில்லியன் டொலர் பாதுகாப்பில் செலவழிகிறதென்றும், ஆனால் ஒரேவித ஆயுதங்களில் பல நாடுகள் செலவழிப்பது வீண் விரயமென்றும் அங்கத்துவ நாடுகள் ஒத்துழைத்து திட்டமிட்டால் தொழில் நுட்பம் கூடிய பிரயோசனம் நல்குமென்றும் கூறுகிறார்.

### சமாதானத்திட்டம்

போர் வீரருக்குப் போர் வேண்டும். ஆனால் அதில் களைப்புற்றுக் கந்தறுந்த உலகுக்கு சமாதானம் வேண்டும். அமெரிக்க ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் வரவேற்கத்தக்க உடன்பாடு ஒன்றிற்கு ரஷ்ய தலைவர் முன்னொரு காலம் காணாத பல சலுகைகளை வழங்குகின்றார். எனவே சமாதானத்துக்கு அமெரிக்கா ஒத்துப்போக வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஒரே ஒரு தடை 'சோழியன் குடுமி சும்மா ஆடுமா?'

### திட்டத்தின் சுருக்கம்

(1) ஐரோப்பாவில் இடைத்தர ஏவுகணைகளிலும், குறுகிய ஏவுகணைகளிலும், சோவியத்திற்கே கூடிய தொகை உண்டு. எனவே அதன் பலம் அதிகம். ஆனால் மாஸ்கோ அனைத்தையும் அகற்ற உடன்படுகிறது. நிபந்தனை அமெரிக்கா தனது அவ்வித ஆயுதங்களை அகற்ற வேண்டும் இது கொர்பச்சேவின் சகாயம்.

2 ஐரோப்பாவில் அணு ஆயுதங்கள் அகற்றப்பட்டால் மரபு ஆயுதங்களே போர் மூண்டால் உபயோகத்தில் இருக்கும் இதில் நேற்றோ பலமற்றதாயும், வார்ஸோ பலம் பெற்றிருப்பதும் பகிரங்க ரகசியமென்பது றீகனின் வாதம். 'நாம் அதற்கென்ன செய்வோம்? இந்தத் திட்டத்தில் போர்க்களத்திற்குரிய ஏவுகணைகள் பிரிட்டிஷ் பிரேஞ் ராணுவ தந்திர ஆயுதங்கள் அனைத்தும் நீக்கப்படுவதில்லை' என்று சோவியத் தற்காலிகமாக உடன்பட்டிருக்கிறது. இதுவும் கொர்பச்சேவின் சகாயம்.

அணு ஆயுத பரிகரணப் பேச்சுக்கு நீண்டகாலம் தடையாகயிருந்தது நேரில் அணு நிலையங்களையும், ஏவுகணை உற்பத்தி நிலையங்களையும் பரிசோதனை செய்யும் உரிமைக்கு ரஷ்யாவின் எதிர்ப்பே!

மாஸ்கோ இதற்கும் ஓம்பட்டிருக்கிறது கொள்கையளவில் இதனை ஒத்துக் கொள்ளுவதாகத் தெரிவித்திருக்கிறது. இதுவும் கொர்பச்சேவ் எடுத்த முடிவு.

### ஐரோப்பாவின் அதிசயம்

எவ்வித பாதுகாப்புமின்றி அணு ஆயுதம் அனைத்தையும் ஒழித்துக்கட்டும் றீகனின் திட்டம் ஐரோப்பாவிற்கு ஆபத்து! இன்று நாம் வேண்டி நிற்கும் சில கேந்திர ஸ்தான ஆயுதங்களுக்கு இத்திட்டம் இடமளிக்கிறது. மேலும் நேரடிப் பரிசோதனைக்கிடமிருந்தால் அதில் ரஷ்யா நேர்மையாகவிருந்தால் கண்டங்களுக்கிடையே கேந்திர ஸ்தான ஏவுகணைகள் பற்றி நல்ல உடன்பாடுகள் நிறைவேற்றலாம். இந்த உணர்வு ஐரோப்பாவில் உதயமாகிறது.

"மேற்கிலும் கிழக்கிலும் வாழும் மக்களுக்கு இது நல்ல செய்தி" என்கிறார் எதனையும் இலகுவில் நம்பாத பிரிட்டிஷ் வெளிநாட்டு அமைச்சர் செர்ஜியோ பிரேஹோ" (Howe)

### பாதகமான விளக்கம்

இதனை வரவேற்க எல்லோரும் ஆர்வம் காட்டவில்லை. முன்னர் நாம் குறிப்பிட்டது போல, சண்டைக்காரருக்கு சமாதானத்தில் சந்தேகம். சத்திர சிகிச்சை நிபுணர் எதற்கும் அறுவை வைத்தியம் என்பார். அதற்கு கிராக்கியில்லாவிட்டால் குபேர வாழ்வு வாழும் அந்தப் பிறவி உணவு உடைக்கே திண்டாடவேண்டும்.

இது நேற்றோவின் வலிமையைக் குறைக்கவும் இறுதியில் குலைத்துக் கொட்டவுமே உருவாகும் திட்டம் என்பவர் ஒரு சாரார்.

### சாதகமான கருத்து

(அ) சோவியத் ரஷ்யாவின் புதிய தலைவர் முந்திய தலைவர்கள் பிரஸ்னேவ், அந்திரப்போவ், ஷேர்னன்கோ எங்கு தோல்வி கண்டாரோ, அங்கு தான் வெற்றியீட்டியதை தமது மக்களுக்கு வெளிப்படுத்துவதில் இன்பங் காண்கிறார்.

(ஆ) அமெரிக்கா ஏவுகணைகள் ஐரோப்பாவிலிருந்து சோவியத் ரஷ்யாவைத் தாக்கும் அபாயத்தை நீக்குவதில் வெற்றிகாண முயல்கின்றார் கொர்பச்சேவ்.

(இ) இராணுவச் செலவினால் பாதிக்கப்படும் ரஷ்ய நிதி நிலைமை திருத்தமடையும் அத்துடன் ஆசியாவிலும் மூன்றாம் உலகிலும் ரஷ்யாவின் ராணுவப்பலம் அதிகரிக்கும்.

(ஈ) நிதி நிலைமையிலும் பார்க்க, இவ்வித ஒப்பந்தம் மேற்கு கிழக்கு (ஐரோப்பா) தொடர்பு ஸ்திரமடையுமென்பதே முக்கியமானது. போர் என்னும் பெரும் பேய் இங்கிருந்து நீங்கினல், சோவியத் நாடு மிக அவசியம் வேண்டி நிற்கும் தொழில் நுட்ப நவீனமயம் நனவாகுமென்று கொர்பச்சேவ் நம்புகின்றார். போரை ஒரு பிழைப்பாகக் கொண்ட போர்வணிகருக்காக உலகம் பணயக்கைதியாக என்றும் இருப்பதா.

## அராலியில் ஹெலி தாக்குதல்:

# ஒருவர் பலி, பலர் காயம் கோவில் வீடுகள் சேதம்

(அராலி நிருபர்)

கல்லுண்டாய் வெளியில் தாழப் பறந்துவந்த ஹெலிகப்டர் ஒன்று திடீரென மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தையடுத்து சைக்கிளில் வந்துகொண்டிருந்த இளைஞர் ஒருவர் கடந்த வெள்ளியன்று பலியானார்.

சம்பவதினம் மாலை மேற்படி இளைஞர் யாழ். நகரிலிருந்து அராலி நோக்கி வந்துகொண்டிருக்கையில் கல்லுண்டாய் வெளியில் மண்டைதீவுப்பகுதியிலிருந்து வந்துகொண்டிருந்த ஹெலிகப்டர் ஒன்று தாழப் பதிந்தது.

ஹெலி தாழப்பதிவதை அவதானித்த பிரஸ்தாப இளைஞர் பீதியின் காரணமாக எதிரே காணப்பட்ட மதகொன்றின் அருகில் குப்புற விழ்ந்து படுத்துக்கொண்டார்.

இதேவேளை மேற்ப இளைஞரை நோக்கி ஹெலிகப்டர் துப்பாக்கிப்பிரயோகம் செய்த பின் மேலேழுந்து சென்றது.

ஹெலியின் துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியான இளைஞர் மூளாயைச் சேர்ந்த செல்லையா செல்லத்துரை என அடையாளம் காணப்பட்டார்.

இச்சம்பவத்தையடுத்து மறு நாட்காலை அராலிப் பகுதியைச் சுற்றி வட்டமிட்ட ஹெலிகப்டர் ஒன்று திடீரெனத் தாக்குதல்களை மேற்கொண்டது. இதனல் பலர்காயமடைந்ததுடன், சில வீடுகளும் சேதமடைந்தன. மேலும் அராலி ஐயனார் கோவிலும் சிறிய அளவிலான சேதத்துக்குள்ளானது.

சுமார் முப்பது நிமிடநேரம் நீடித்த ஹெலிகப்டர் தாக்குதலையடுத்து தமிழீழ விடுதலைப்

(5-ம் பக்கம் பார்க்க)

[இன்று தேர்த்திருவிழா]

## உடுவிலூர் மீனட்சி

வெள்ளை நிற மலரணிந்து விரும்பும் அடியார் மகிழ
வண்ண அழகு விட்டெழுந்து புது தேரிலே மீனட்சி
கள்ளமில்லா உள்ளத்தார் களிபபடைய உடுவிலில்
மீனட்சி சுந்தரேஸ்வரருடன் மெல்ல வரக்கண்டோமே

கல்லொத்த நெஞ்செனினும் கசிந்துருகக் காட்சி தந்து
எல்லையிலா இன்பத்தை ஈந்தருளும் தேவியவள்
பல்லோர்கள் புடைசூழ நெல்லு வயல் மத்தியிலே
அல்லல் களைந்தருளும் அற்புதத்தைக் கண்டோமே

உடுவிலூர் ஈஸ்வரி நாகராஜா.